**முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.**
**எம்.சி.ஓ.பி. எண். 367/2019**

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3ம் நாள் புதன்கிழமை.
இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1 பெத்த பாப்பம்மா.

**குறுக்கு விசாரணை**

**நி.ம.சா.ஆ. 1 மனுதாரரின் ஊனச் சான்றிதழ்**

விபத்து நடந்தபோது எனக்கு 64 வயது. நான் கூலி வேலை செய்து கொண்டிருந்தேன். ஒரு நாளைக்கு ரூ.500/– சம்பாதித்தேன். என்னுடைய வயது வருமானம் தொழிலை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்து 11 வருடம் இருக்கும். மாலை 3 இருக்கும். கார்வேட்டி நகரில் விபத்து நடந்தது. நான் டாடா ஏசி வாகனத்தில் சிவகங்கபுரத்திலிருந்து பள்ளப்புதூர் சென்றபோது விபத்து நடந்தது. டாடா ஏசியில் மொத்தம் 4 பேர் சென்றோம். இருசக்கர வாகனம் வந்து நாங்கள் சென்ற வாகனத்தின் மீது மோதியது. இடது கையில் எலும்பு முறிவு காயம் ஏற்பட்டது, இடுப்பிலும் காயம் ஏற்பட்டது. டாடா ஏசியில் முன்பக்க இருக்கையில் அமர்ந்திருந்தேன். திருப்பதி சாய் சுதா மருத்துவமனையில் 1வாரம் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அதன் பிறகு சித்தூர் பாபு தனியார் மருத்துவமனையில் 2வார காலம் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். இடது கையில் அறுவை சிகிச்சை செய்து ராடு பொருத்தியுள்ளார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறிவில்லை என்றால் சரிதான். காவல்துறையினர் என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள். விபத்து குறித்து நான் வேறு எந்த நீதிமன்றத்திலும் சாட்சியம் அளிக்கவில்லை. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. தற்போது நான் வேலைக்கு செல்லவில்லை. இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரையும் காப்பீட்டு

நிறுவனத்தையும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் சீட்பெல்ட் அணியாமல் பயணம் செய்ததால்தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் தரவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.